# அமுதசுரபி இதழ் வெளிப்படுத்தும் வேளாண்மைக் கருத்துகள்

மூ. சுதா
முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோவை

**முன்னுரை**

உலகில் செயல்படுத்தப்படுகின்ற அனைத்துத் தொழில்களுக்கும் முதன்மையான தொழில் வேளாண் தொழிலே ஆகும். இதனை தனது குறட்பா மூலம் ஆழமாய் எடுத்துரைக்கிறார் வள்ளுவர்.

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

அத்தகைய சிறப்புமிக்க வேளாண் தொழிலானது பிற தொழில்களுடனும், சமூகத்துடனும், அரசமைப்புடனும் மிக நெருக்கமான உறவுமுறையைக் கொண்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் விவசாயமும், விவசாய மக்களும் அழிவின் விளிம்பில் இருக்கின்றனர். இவற்றை மீட்டெடுக்க வேண்டிய கட்டாயத்தில் சமுதாயம் உள்ளது. வேளாண்மை பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக உள்ள ஊடகங்களுக்கு உண்டு. கட்டுரைகளின் வாயிலாக வேளலாண்மை பற்றிய செய்திகளை வெளியிட்டு வருகின்ற அமுதசுரபி, தமிழ் இலக்கிய இதழ்களில்

ஒன்றாக விளங்குகின்றது. அமுதசுரபி இதழில் வெளியான வேளாண்மை குறித்த கருத்துக்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**அமுதசுரபி இதழ் அறிமுகம்**

அள்ளஅள்ளக் குறையாத இலக்கியச் செல்வங்களை வாரி வழங்கிவரும் "அமுதசுரபி" இதழ் 1948-ல் தொடங்கப்பெற்றது. "சொல்லின் செல்வா" ரா.பி.சேதுப்பிள்ளை இப்பெயரைச் சூட்டினார். விக்ரமன் 54 ஆண்டுகள் ஆசிரியராய் விளங்கினார். 2005-ம் ஆண்டு முதல் திருப்பூர் கிருஷ்ணன் ஆசிரியர் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்.

**வேளாண்மையின் தோற்றம்**

நமது முன்னோர்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வேளாண் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். வரலாற்றில் வேளாண்மையின் வளர்ச்சியும் முன்னேற்றமும் வெவ்வேறு தட்பவெப்ப நிலைகள், பண்பாடுகள், தொழில்நுட்பங்கள் போன்றவற்றைச் சார்ந்து மாறுபட்டு இருந்துள்ளன.

"உலகில் வேளாண்மை தொடங்கி 10,000 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாக மண்ணியல் - தாவரவியல் அறிஞர்கள் மதிப்பிட்டுள்ளார்கள். வேளாண்மை என்றால் தானாவே விளைவது அல்ல. மனிதன் பாடுபட்டு நிலத்தை இரும்புக் கருவிகள் வருவதற்கு முன்பிருந்தே கற்கருவி, கம்பு கொண்டு கொத்திப் பயிரிட்டதைக் கணக்கில் கொள்ளலாம்" (ஆர்.எஸ்.நாராயணன், இயற்கை வேளாண்மை அன்றும் இன்றும், ப-1).

**கால மாற்றமும் மாறாத விவசாயிகள் வாழ்க்கையும்**

1978ம் ஆண்டு அமுதசுரபி வேளாண்மைச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. அவ்விதழில் எஸ்.வி.பார்த்தசாரதியால் எழுதப்பட்ட "விவசாயம் வாழ்க்கை முறையா? வணிகத்துறையா? என்ற கட்டுரை இடம் பெற்றது. அக்கட்டுரை மீண்டும் 2013ம் ஆண்டு பிப்ரவரி இதழில் வெளியிடப்பட்டது. இக்கட்டுரையில் விவசாயிகள் பற்றிய கருத்துக்களும் சிந்தனைகளும் சிந்திக்கத்தக்கனவாய் உள்ளன. விவசாயிகள் தற்கொலை பெருகி வரும் காலகட்டத்தில் அமுதசுரபி இதழ் இதுபோன்ற கட்டுரைகளை வெளியிட்டு மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது.

"தொழில் துறையில் செய்யப்படும் எல்லாப் பண்டங்களின் விலைகளும் மூலப்பொருள்களின் விலை, உற்பத்திச் செலவு, குறைந்த லாபம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால் விவசாயப் பண்டங்களின் விலைகள், நகர்புறவாசிகளின் பொருளாதார நிலையையொட்டித்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. அல்லது ஒருவித ஆதாரமும் இல்லாமல் விடப்படுகின்றன. இந்நிலையில் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்க அரசினர் முன்வரவில்லை. விவசாயப் பொருள்களுக்கு விலை நிர்ணயிக்க என்று ஒரு கமிஷன் உள்ளது. அது எந்தத் தத்துவத்தின் கீழ் செயல்படுகிறது என்பது யாருக்கும் புரியவில்லை" என்று பார்த்தசாரதி கூறுகிறார். விவசாயப் பெருமக்களின்

வாழ்வாதாரம் இன்றைக்கு நேற்று அல்ல காலங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டுவரும் நிலையை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

1978, 2013 ஆண்டு மட்டுமல்லாது 2017ம் ஆண்டுகூட பார்த்தசாரதியின் கருத்துக்கள் உண்மையானதாக நிலைபெற்றுள்ளன. விவசாயத்துறையில் எந்தவித வளர்ச்சியும், மாற்றமும் ஏற்படவில்லை என்று கருத இடமுண்டு. பெருகி வரும் தொழில் நுட்ப வளர்ச்சியினால் விவசாய விளைநிலங்கள் அடுக்குமாடி குடியிருப்புகளாக உருமாறி வருகின்றன. தொழில்கள் செய்ய ஊக்குவிக்கின்றன. இந்த நிலை தொடாந்தால் உணவு உற்பத்தியில் நாடு பின்னடைவைச் சந்திக்க நேரிடும்.

**இயற்கை உரங்களின் தேவை**

அயல்நாடுகளின் நுகர்வுக் கலாசாரத்தின் மோகத்தில் பலவிதங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக உணவு முறைகளில் ஏற்ற மாற்றங்கள் அதிகம். பீட்சா, பர்கர், நூடில்ஸ் போன்றவற்றை ஏற்றுக் கொண்டுள்ளதை கூறலாம். உணவு முறைகள் மட்டுமல்லாது குப்பைகளை உரமாக மாற்றும் தொழில்நுட்பத்தை அயல்நாடுகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தில் உள்ளோம் "சாப்ட்வேர், செல்போன், கார் ஆகியவற்றில் அவர்களைப் பின்பற்றும் நாம், அதே நாடுகளிலிருந்து குப்பைகளைச் செல்வமாக்கி எவ்வாறு இராசயன உர இறக்குமதியையும், பயன்பாட்டையும் குறைக்கலாம் என்பதையும் கற்றுக்கொள்வது நன்றல்லவா? மறுசுழற்சி நுட்பங்களை உகந்தவாறு பயன்படுத்தினால் ஒரு போதும் உணவுப் பற்றாக்குறை என்ற பேச்சுக்கு இடமே இல்லை." (ஆர்.எஸ்.நாாயணன், இயற்கை வேளாண்மை அன்றும் இன்றும்: ப-70) தெளிவுபடுத்துகிறார்

பூமி, பொன் விளையும் பூமியில் பலவிதமான இராசாயன உரங்களைப் பயன்படுத்தி மண்வளத்தைக் கெடுத்தது மட்டுமல்லாமல் உணவுப் பொருள்களின் இயற்கைச் சத்துக்களையும் அழித்து விட்டோம். இதனால் பலவித நோய்களின் இடமாக உடலை மாற்றியதைத்தவிர வேறு எந்தவிதப் பயனையும் அடையவில்லை. "இந்தியாவின் விளைநிலத்தில் 95% செயற்கை முறை விவசாயமாக மாற்றி உற்பத்தியைப் பெருக்கி தேவைகளைப் பூர்த்திசெய்ய அதிக நஞ்சு தன்மையுள்ள உரங்களையும், பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்துகிறது." (அ.சு, நவ-2015: ப-132) விளைச்சலைப் பெருக்குகிறோம் என்ற பெயரில் நோய்களைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். எதிர்காலச் சந்ததியினரை பலவீனமாக்கிவிடும் இந்தச் செயற்கை உரம். இந்த நிலைமாற வேண்டுமானால் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும்.

**இயற்கை விவசாயம்**

விவசாயம் இந்தியப் பண்பாட்டின் ஒன்றிணைந்த அடையாளம். இங்குக் கொண்டாடப்படும் பண்டிகைகள் எல்லாம் உணவின் அடிப்படையைக் கொண்டவை. இதன் காரணத்தை ஆராய்ந்தால் விவசாயமே அடிப்படை என்றும் விளைச்சலின் மிகுதியே இவ்வகைக் கொண்டாட்டங்களுக்கு வழிவகுத்தன் என்றும் கருதுவதற்கு இடமுண்டு. இந்த விளைச்சல் மிகுதிக்குக் காரணம் முன்னோர்கள் மேற்கொண்ட இயற்கை விவசாய முறையே ஆகும்.

"இயற்கை விவசாயம் என்பது உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளைத் தவிர்த்து, மண்ணில் உள்ள நுண்ணுயிர்களையும், இயற்கைத் தாதுக்களையும் காத்து, அதன் வீரிய சக்தியைப் பெருக்கி மேற்கொள்ளப்படும் விவசாய முறை ஆகும். அவ்வாறு ஒரு விளைநிலத்தை இயற்கை முறையில் மாற்ற தேவையான அனைத்து இடுபொருட்களும் இயற்கையாகவே நம்மைச்சுற்றி அமைந்துள்ளன." (அ.சு: நவ-2015: ப-133) என்று இயற்கை வேளாண்மையைப் பற்றி விளக்குகிறார் வி.பி.பாலாஜி

கலப்பட நஞ்சிலிருந்து வருங்கால சந்ததிகளை காப்பாற்ற வேண்டும் என்ற விழிப்புணர்வு இன்று மக்களிடையே பெருகி வருகின்றது. எவ்வாறு என்றால் இயற்கையிலிருந்து செயற்கையாக பெறப்பட்டவையே வேதிப்பொருட்கள் (Chemicals). அவற்றிலிருந்து அந்நிய நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களைத் தவிர்த்து இந்திய நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட இயற்கை உணவுப் பொருட்களை விற்கும் "பசுமை பல்பொருள் அங்காடிகள்" பெருகி உள்ளன. இயற்கை விவசாயம் மூலம் பெறப்பட்ட உணவுப்பொருட்களை வாங்கிட மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

**மாடுகளும் உழவுத் தொழிலும்**

வேளாண் தொழிலின் கூறாக அமைந்ததே கால்நடை வளர்ப்பு ஆகும். கால்நடையில் முக்கிய இடம்பெறுவன பசுக்கள். 2013ம் ஆண்டு தொடங்கப்பட்ட கோசாலை மூலம் 1150 மாடுகள், கன்றுகளை அழிவிலிருந்து காப்பாற்றியுள்ளார் அமெரிக்க மென்பொறியாளரான சிவக்குமார். அவர் கூறியதாவது: "அடிப்படையில் நாங்கள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மாடுகளும், உழவுத்தொழிலும் பிரிக்க முடியாத ஒருவித பந்தம் கொண்டவை. மாடு என்றால் செல்வம் என்று பொருள். பாசமாய் நாங்கள் வளர்த்த காங்கயம் மாடுகள் அருகிப் போச்சு. படித்தவுடன் அமெரிக்க சென்று விட்டேன். அங்கு என்னுடன் பணி செய்தவர்கள் அடிக்கடி ஏதேனும் நோய் வந்து கஷ்டப்படும் போது, என் விஷயத்தில் ஒரு ஜலதோஷம் வந்தது இல்லை. சிறுவயது முதல் நான் தினமும் குடித்த நாட்டுமாட்டுப் பால், தயிர், மோர், நெய் போன்ற சத்தான உணவுப் பொருட்களே எனக்கு நல்ல நோய் எதிர்ப்பு சக்தி தந்தன என்பதை உணர்ந்தேன்". (அ.சு, நவ.2016: ப-96) என்று நாட்டு மாட்டுப் பாலில் உள்ள அரிதான சக்தியைத் தம் வாழ்க்கை அனுபவத்தில் உணர்ந்த உண்மைகளை எடுத்துக் கூறுகிறார் சிவக்குமார். நம் நாட்டில் மொத்தம் 42 வகை மாடுகள் உள்ளன. வேளாண்மைப் பணிகளுக்கும் பாரம் இழுக்கவும் மாடுகள் உதவுகின்றன. தென் மாவட்டங்களில் ஜல்லிக்கட்டுகளில் 30% காங்கயம் மாடுகளே பங்கு கொள்கின்றன.

சீமைமாடுகளின் பால்களைப் புறக்கணித்து நாட்டு மாட்டுப்பால் அருந்தி ஆரோக்கியமான சமுதாயம் உருவாகவும் அத்துடன் மாடுகள் அழியாமல் பாதுகாக்கவும் வேண்டும் என்பதே சிவக்குமார் போன்றாரின் எண்ணமாக உள்ளது.

**முடிவுரை**

- ◊ காலம் மாறினாலும் விவசாயிகளின் வறுமை நிலை, மாறவில்லை என்பது எடுத்துரைக்கப்பட்டது.

- இயற்கை விவசாயத்தின் தேவையும், இயற்கை உரங்களின் தேவையும் நாட்டுப்பசுக்களின் தேவையும் உணர்த்தப்பட்டது

**பார்வை நூல்**

- ஆர்.எஸ்.நாராயணன், இயற்கை விவசாயம் அன்றும் இன்றும்.